முதன்மைக் கல்வி அலுவலகம்
வேலூர்

பொது தகவல் வழங்கும் அலுவலர் மற்றும்
முதன்மைக் கல்வி அலுவலரின்
நேர்முக உதவியாளர் (மேல்நிலைக் கல்வி), வேலூர்.

ந.க.எண். 1549/ஆ1/2022. நாள்: 16.05.2022

பொருள் : தகவல் அறியும் உரிமைச் சட்டம் – 22/2005–ன் கீழ்– பட்டுக்கோட்டை – கரிக்காடு, திரு. கோ. பாலசுப்ரமணியன் என்பவர் 7 வினாக்களுக்கான தகவல் கோரியது – அனுப்பக் கோருதல் – சார்பு.

பார்வை : திரு. கோ. பாலசுப்ரமணியன், 487, 136/ஏ1, பாரதி சாலை கரிக்காடு, பட்டுக்கோட்டை என்பவரின் விண்ணப்பம் நாள். 12..05.2022.

#######

பார்வையில் காணும் கடிதப்படி தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005–ன் கீழ் வழங்கக் கோரியுள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள 7 வினாக்களுக்கான தகவல்களை உரியவருக்கு பார்வையில் காணும் விலாசத்திற்கு அனுப்பிவிட்டு, அதன் நகல் ஒன்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர், வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் சார்ந்த அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

1. வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தெலுங்கு மொழியை ஒரு மொழிப்பாடமாகப் பயிற்றுவிக்கும் பள்ளிகளின் எண்ணிக்கை விவரம்.

2. வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தெலுங்கு மொழி ஒரு மொழிப்பாடமாக எந்தெந்த வகுப்புகளில் பயிற்றுவிக்கப்படுகிறது என்ற விவரம்.

3. வேலூர் மாவட்டத்தில் தெலுங்கு மொழியை பயிற்று மொழியாகக் (Medium of Instruction) கொண்டு பயிற்றுவிக்கும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை விவரம்.

4. வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தெலுங்கு மொழியை பயிற்று மொழியாகக் (Medium of Instruction) கொண்டு எந்தெந்த வகுப்புகளில் பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன என்கின்ற விவரம்.

5. வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தெலுங்கு மொழியை ஒரு பாடமாகவும், தெலுங்கைப் பயிற்றுமொழியாகவும் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை விவரம்.

(த.பி.பா.)

6. வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 2016 முதல் 2020 வரை தெலுங்கை ஒரு பாடமெழியாகப் பயின்று பத்தாம் வகுப்பில் தேர்வு எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை விவரம்.

7. வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 2016 முதல் 2020 வரை தெலுங்கை பயிற்று மெழியாகக் கொண்டு பயின்று பத்தாம் வகுப்புத் தேர்வு எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை விவரம்.

பொது தகவல் வழங்கும் அலுவலர், (ம),
முதன்மைக் கல்வி அலுவலரின்
நேர்முக உதவியாளர் (மேல்நிலைக் கல்வி),
வேலூர்.

16/03/22

பெறுநர்,
மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர்,
(தங்களுக்குட்பட்ட வினாவிற்கு மட்டும் தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கைக்காகவும்)

நகல்– 1. அரசு (ம) அரசு உதவிபெறும் உயர்நிலை, மேல்நிலைப் –
பள்ளித் தலைமை ஆசிரியர்கள், (ம) இவ்வலுவலக ஆ3 பிரிவிற்கு வே.மா.
2. வட்டாரக் கல்வி அலுவலர்கள், வே.மா./இவ்வலுவலக ஆ2 பிரிவிற்கு.
(தொடக்க (ம) நடுநிலைப் பள்ளிகள் சார்ந்த வினாவிற்கு மட்டும்)

//ப.த.//